பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
இரவல்துறைப் பகுதி

விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

றெனி மூக்குக் கண்ணாடி நிலையம்
கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 21 ஞாயிற்றுக்கிழமை (0[illegible].02.2002) தொலைபேசி 3378 ஒலி 45

## ஜனாதிபதியின் செயலக அறிக்கை சமாதானத்தைப் பாதிக்கும்?

### அரசியல் ஆய்வாளர்கள் ஆரூடம்

(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பலப்படுத்திக் கொள்ள இருப்பதாகவும் அதனையே ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி விடுத்த அறிக்கை காட்டுவதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம் என்பன நடைமுறையில் இருக்கும்போது ஜனாதிபதி செயலகம் அவசர அவசரமாக விடுத்த அறிக்கை மீண்டுமோர் அமைதியின்மையை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமென்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி செயலக அறிக்கை தொடர்பாக அமைச்சர் லொக்கு பண்டாரவிடம் கருத்துக் கேட்போது ஜனாதிபதியின் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ளதால் அதுகுறித்து எந்தக் கருத்தையும் வெளியிட முடியாதிருப்பதாக தெரிவித்தார். (வ)

## சமாதானப் பேச்சுக்கு வசதியாக புலிகளின் தடையை நீக்கலாம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கு வசதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது, அமெரிக்காவை எவ்விதத்திலும் பாதிக்காது என்று அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் அபிதில் ராஜ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பொருளாதார மீள் கட்டமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் மெலிந்த மொறகொட, கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சரை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் போதே அபிதில் ராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் ஒருமைப்பாட்டையும், தன்னாதிக்கத்தையும் பாதுகாக்க அமெரிக்கா எப்போதும் பாடுபடும். இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு வசதியாக புலிகள் மீதான தடை நீக்கப்படுவது அவசியமானால் அது அமெரிக்காவை எவ்விதத்திலும் பாதிக்காது என்று கூறியுள்ளார். (இ)

### விடுதலை செய் அல்லது விசாரணை செய்

# நீர்கொழும்பு சிறையில் உள்ள 550 கைதிகள் உண்ணாவிரதம்!

## புதிய அரசுக்கு நெருக்கீடு

(நமது நிருபர்)

**நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 550 யுத்தக் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று முதல் உண்ணாவிரத போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.**

**உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ள சிறைக்கைதிகள் குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டவர்களாவர். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள 550 கைதிகளில் 40 பேர் பெண்கள்.**

குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள்

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள 550பேரில் சுமார் 40பெண்கள் முதற்கட்டமாக நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் பெண்களினால் ஆரம்பிக்

தம்மை வீடுவிக்குமாறு கோரி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள போதும் இவர்களை பிணையில் விடக்கூடிய நிலை இல்லை என்றும் நீதியரசர் லொக்குபண்டார

## 2500 சிறைக் கைதிகள் நாளை விடுதலையாவர்

(கொழும்பு)

நாளை இடம்பெறவுள்ள இலங்கையின் 54வது சுதந்திரதின வைபவங்களை ஒட்டி 2500 சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தீர்மானித்துள்ளார்.

அரசியல் அமைப்பின் மூலம் ஜனாதிபதி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி 2500 கைதிகளை விடுதலை செய்யவுள்ளார்.

சிறைச்சாலை ஆணையாளர் உபாலி சமரவீராவின் சிபார்சின் பேரில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா கையளித்த பட்டியலின் பிரகாரமே இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர். (வ)

### மீனவர் போராட்டத்திற்கு ஆதரவாக

## எதிர்வரும் 7ந் திகதி

மிக நீண்ட காலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தம்மை விசாரணை செய்து விடுவிக்குமாறு கோரி இந்த உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

னம் முதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் பெண்களினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணா விரதத்தை அடுத்து ஆண்கள் நேற்று தமது உண்ணா விரதப் போரை ஆரம்பித்துள்ளனர்.

யில் விடக்கூடிய நிலை இல்லை என்றும் நீதியரசர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது சிறைச்சாலை அதிகாரிகளுடன் சம்மந்தப்பட்ட விடயம் அவர்கள் தான் இதுவிடயத்தில் முடிவெடுக்கவேண்டும் அதனை சட்டமா அதிபரும் பரிசீலிக்க வேண்டும் என்றும் நீதி அமைச்சர் லொக்குபண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ். சிறைக்கைதிகள் நேற்றும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 17 பேர் நேற்று இரண்டாவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விரைவில் விசாரணைகளை மேற்கொண்டு விடுதலை செய்யுமாறு கோரியே இவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் உண்ணாவிரதம் தொடர்பாக யாழ் மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜாவிற்கும் சிறைச்சாலை ஆணையாளர்க்கும் யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ம)

# எதிர்வரும் 7ந் திகதி குடாநாடு தழுவிய ஹர்த்தால்

(மந்திகை)

யாழ் குடாநாடு தழுவிய வகையில் எதிர்வரும் 7ந் திகதி ஹர்த்தால் ஒன்றை நடத்த வடமராட்சி தொழில்சார் பண்பாட்டுப் பேரவை திட்டமிட்டுள்ளது.

மீனவர்களின் நியாயமான போராட்டத்திற்கு மேலும் ஆதரவை வலுப்படுத்தும் வகையிலேயே இக் ஹர்த்தாலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பேரவையின் செயற்குழு நேற்றுக் கூடி முடிவு செய்துள்ளது. (இ-23)

# மீனவர் போராட்டத்திற்கு இறங்குதுறை ஊழியர் ஆதரவு

## பொருள் இறக்கும் பணி ஸ்தம்பிதம்

(மந்திகை)

யாழ் குடா நாட்டுக்கு ஒரு தொகுதி சீமெந்து மற்றும் உர வகைகளை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு வந்துள்ள பொல்கொட கப்பல், பொருட்களை இறக்காது தரித்து நிற்பதாக தெரியவருகிறது.

பொருட்களை இறக்கும் இறங்குதுறை ஊழியர்கள் மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதனால் பருத்தித்துறை இறங்குதுறைப் பணிகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மேற்படி கப்பல் கடந்த மூன்று தினங்களாக பருத்தித்துறைக்கும், காங்கேசன்துறைக்கும் மாறிமாறி வந்து போவதாக தெரிவருகிறது. (இ-23)

# யாழ். செயலகத்தில் தேசியக் கொடி ஏற்றுவது தடுத்து நிறுத்தப்படும்

## மீனவர் சமாசம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மீனவர்கள் அரச செயலகம் முன்பாக மேற்கொண்டுவரும் மறியற்போராட்டம், இன்று நடைபெற மாட்டாது என்றும் நாளை சுதந்திர தினத்தன்று போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

கடற்றொழிலாளர் சமாசம் நேற்று யாழ் செயலகம் முன்பாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியது. அம்மாநாட்டிலேயே மேற்கண்டவாறு முடிவு அறிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மீனவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அரசாங்கம் இதுவரை சாதகமான பதில் எதனையும் தரவில்லை. இந்நிலையில் அரசாங்கம் சாதகமான முடிவை மீனவர்களுக்கு வழங்க மறுத்தால் எமது போராட்டம் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

அத்துடன் நாளை அரச செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு தேசியக் கொடி ஏற்றலுடன் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள போதும் அதனை முறியடிக்கும் வகையில் தமது போராட்டம் அமையும் என்று மீனவர் சமாச பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமது போராட்டத்திற்கு பொதுமக்களும், பொது அமைப்புக்களும் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-10-19)

## சிறுவிளம்பரம்

### தேவை

தொலைபேசி நிலைய உபகரணங்கள் விற்பனைக்கு இருப்பின், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். 521/5, பருத்தித்துறை வீதி, நல்லூர். (4438)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ் உயர் குடும்பத்தைச் சேர்ந்த 26 வயதுடைய செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி ஆசிரியருக்கு அழகான படித்த மணமகள் தேவை தொடர்பு: விளம்பர இல -232, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம். (4421)

### வகுப்புகள்

ஆண்டு 6 இல் இருந்து 11 வரையான முக்கிய பாடங்களும் அத்துடன் ஆங்கிலத்தில் கதைப்பதற்கும் பயிற்சி, அனுமதிக்கு ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (4439)

### கதிரைகள் தேவை

நல்ல நிலையிலுள்ள கதிரைகள் உடன் தேவை.
தொடர்பு:-
விளம்பர இலக்கம் 100
15,வெள்ளாந்தெரு, யாழ்.


# சிறந்த விஞ்ஞான, கணித ஆசிரியராக விளங்கிய அமரர் மகாதேவன் கல்வியுலகின் அகல் விளக்கு.



இப் பூமியில் பிறக்கும் போது அது இருந்ததைவிட நல் லதோர் இடமாக அமைத்து இவ்வுலகத்தை விட்டு நீங்க வேண்டும் என்ற தத்துவத்துக் கமைய வாழ்ந்த சிலரில் ஒருவர்தான் அமரர் ஆ.மகாதேவன்

**இன்று அமரர ஆ.மகாதேவனின் 31ஆம் நினைவு நாள்**

விஞ்ஞானப் பட்டதாரியாகிய அமரர் மகாதேவன் கல்வியின் நோக்கங்களை உணர்ந்து கற்பதற்கு வேண்டிய சூழலையும் ஏற்படுத்தி, சிறந்த ஆசிரியனாக ஒரு கல்வியியலாளராக, ஆசிரியர்களுக்கு ஆசிரியனாக தலை நிமிர்ந்து செயற்பட்டவர்! தென்னிலங்கையில் தனது கற்பித்தல் பணியைத் தொடங்கி சிறந்த விஞ்ஞான ஆசிரியராகவும். கணித ஆசிரியராகவும் சிங்கள மாணவர் மத்தியில் திகழ்ந்து, யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாக வந்தது எமது யாழ் மாவட்ட மாணவர்கள் பெற்றபேறே என்று சொல்லாலம். அதுவும் யாழ் இந்துக்கல்லூரி இவ்வாசிரியனைப் பெற்று பெருமை தேடிற்று. இவர் அக்கல்லூரியில் கணித, உயிரியல் க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கு இரசாயனவியல் கற்பிக்கும் ஒரு தலைசிறந்த ஆசானாகத்திகழ்ந்தார்.

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் மாத்திரமின்றி அவர் இறக்கும் வரை யாழ்ப்பாண மாவட்டத்து மாணவர்களும், வெளிமாவட்ட மாணவர்களும் அவரிடம் தேடிச்சென்று இரசாயனம் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மருத்துவத்துறைக்கோ, பொறியியல்த்துறைக்கோ, விஞ்ஞானத்துறைக்கோ பல்கலைக்கழங்களில் அனுமதிக்கப்படுவதற்கு பெருந்துணையாக நின்றவர். இவரிடம் கற்றவர்களில் அநேகர் இன்று உலகத்தின் வெவ்வேறு பாகங்களில் தலைசிறந்த டாக்டர்களாகவும், எஞ்சினியர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், ஆசிரியர்களாகவும், இன்னும் வேறு உயர்பதவிகளை வகிப்போர்களாகவும் திகழ்கின்றனர்.

ஏழை மாணவர்களை அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தவர். தன்னலம் சிறிதும் இல்லாமல், உண்மை, தூய்மை, எப்பொழு தும் தன் கடமை, ஆன்மீகம் ஆகிய சிறந்த தர்மத்தின் அம்சங்களைக் கொண்டு, நிமிர்ந்த நடையும், சிறந்த சொற்பேச்சும், தன் கருத்தை யாருக்கும் அஞ்சாது உரைக்கும் வன்மையும் கொண்டு கல்வி உலகத்தில் உலாவந்தார்.


அமரர் மகாதேவன் சுயபோக்கையும், சுயகட்டுப்பாட்டையும் தன்னகத்தே இயல்பாகக் கொண்டவராகத் திகழ்ந்தார்.

### *பலாலி ஆசிரியகலாசாலை*

அவரது சேவை பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்குக் கிடைத்தமை ஆசிரிய சமூகம் பெற்ற பேறேயாகும். அங்கு அவர் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு இரசாயனம் கற்பித்ததுடன், விஞ்ஞானம் கற்பித்தல் முறையியலையும் கற்பித்து விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பெருமை தேடிக்கொடுத்தார். அது மாத்திரமன்றி ஆங்கில நெறியில் கற்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கு 'கல்வித்தத்துவம்' எனும் பாடத்தை தனக்கேயுரித்தான பாணியில் சிறந்த ஆங்கில மொழியில் போதித்தமை அவருடைய ஆங்கில மொழி ஆற்றலை வெளிக்கொணருகிறது. இவ்வளவு ஆற்றலையும், பெருமையையும் கொண்ட, கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அமரர் மகாதேவன் ஒரு கலைஞனுமாவார். அவர் நடித்த மேடைகள் பல. பலாலி ஆசிரியகலாசாலையில் மேடையேறிய ஒரு நாடகத்தில் அவர் 'சிவகாமி' என்னும் ஒரு குடும்பப் பெண்ணாக நடித்த காட்சிகளை அவரிடம் கற்றவர்களும், சமகால ஆசிரிய சமூகமும் என்றும் மறவாது.


தம்பியப்பா காங்கேசபிள்ளை
சிரேஷ்ட விரிவுரையாளர்
பலாலி ஆசிரிய கலாசாலை.


அவர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது காலன் அவரைத் திடீரென அரவணைத்தது எம் மண்ணின் விஞ்ஞான மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். அவரின் சேவைகள் கல்வி உலகில் என்றும் அகல் விளக்காக ஒளியேற்றிக் கொண்டேயிருக்கும்.





பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த சிறுவர் பாடல் பரிசளிப்பு விழா வலம்புரி பத்திரிகைக் காரியாலயத்தில் இடம்பெற்ற போது மூதறிஞர் சொக்கலிங்கம் (சொக்கன்) மங்களவிளக்கேற்றுவதையும், அருகில் வலம்புரி நிர்வாக இயக்குனர் வெற்றிவேலாயுதம், யாழ் மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம், வலம்புரி ஆசிரியபீட செய்தி ஆசிரியர் எஸ்.துரைசிங்கம் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும். செல்லத்துரை ஞாபகார்த்த பரிசுக் கேடயத்தை ஆணையாளர் இராமலிங்கம் முதற்பரிசு பெற்ற கவிஞர் எஸ்.குகதாசனுக்கு வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

**வலம்புரியின் ஆதரவுடன் மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தமாக நடந்த சிறுவர் பாடல் போட்டி பரிசளிப்பு விழாவின் காட்சிகளை படங்களில் காண்கிறீர்கள்**



மூதறிஞர் குகஸ்ரீ சொக்கன் அவர்கள் உரையாற்றுகிறார். அரங்கில் மூத்த எழுத்தாளர் புத்தொளி சிவபாதம் அவர்களும் காணப்படுகிறார்.



விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஆணையாளர் இராமலிங்கத்துக்கு வலம்புரி நிர்வாக இயக்குனர் வெற்றி வேலாயுதம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.



வலம்புரியின் ஆலோசகரும் முன்னாள் கல்விப்பணிப்பாளருமான கா.சி.வேலாயுதம் அவர்கள் உரையாற்றுகிறார்



விழாவில் கலந்து கொண்ட போட்டியாளர்கள், கவிஞர்கள், ஆர்வலர்களில் ஒருபகுதியினர்.

# சமாதானப்பேச்சில் தடங்கல் ஏற்படுவதை அரசு விரும்பவில்லை

## வலியுறுத்திக் கூறுகிறார் பிரதமர்

(கொழும்பு)

சமாதானப்பேச்சுவார்த்தையில் குழப்பங்கள், இழுபறிகள் ஏற்படும் சூழ்நிலையில் மீண்டும் மோதல்கள் வெடிப்பதை தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் நிரந்தர உடன்பாட்டுடன் கூடிய யுத்த நிறுத்தம்ஏற்படுத்துவதில் ஆர்வமாக உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் நினைவு தின வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

படையினருக்கும், புலிகளுக்கும் மோதல் ஏற்படாத வண்ணம் இரு தரப்பினரின் உடன்பாட்டுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படலாம். அதேபோல் ஏ-9 கண்டிப்பாதையும் இம்மாத இறுதிக்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கூறியவற்றைத் தற்போது நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது.

வன்னிப் பிரதேசத்திற்கும், வடகிழக்கு பகுதிகளுக்கும் விதிக்கப்பட்ட தடைகளை அரசு நீக்கிக்கொண்டு வருகின்றது. இதேபோல் நாடு முழுவதிலுமுள்ள மீன்பிடித் தடைகளைச் சிறிது சிறிதாக அகற்றிவர எமது அரசாங்கம் முயற்சி செய்கின்றது.

முன்னைய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது தடையை விதித்திருந்தாலும் அனைத்துப் பொருட்களும் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. பொருட்கள் கிடைக்காது பாதிப்படைந்தவர்கள் தமிழ் மக்களே.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் குழம்பியமைக்கு இருசாராருக்கும் இடையில் நிலவிவந்த சந்தேகங்களே காரணமாயின.

இவற்றைக்கருத்தில்கொண்டு எமது அரசாங்கம் தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு மக்களையும் அரசாங்கம் தனது குடிமக்களாகக் கருதி நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் வெகு விரைவில் சாத்தியமான தீர்வை காண முயற்சிக்கும் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## இன்று ஒரு தகவல்

### கோபமே வராதவன்

ஓர் ஊரில் இளைஞன் ஒருவன் இருந்தான். ஊர் அவனை எப்படி எரிச்சலூட்டினாலும் அவனுக்குக்கோபமே வராது. சிரித்துக்கொண்டே அங்கிருந்து சென்றுவிடுவான். நண்பன் ஒருவன் 'எனக்கு அடிக்கடி கோபம் வருகிறது. பிறகுதான் ஒன்றுமில்லாததற்கு ஏன் இப்படிக் கோபப்பட்டேன் என்று வருந்துவேன். எது நடந்தாலும் கோபமே கொள்ளாத உன்னைப் பார்க்கும் போது எனக்குப் பொறாமையாக இருக்கிறது. உன்னால் மட்டும் எப்படி முடிகிறது?' என்று கேட்டான்.

அதற்கு அந்த இளைஞன் 'நான் சிறுவனாக இருந்த பொழுது எடுத்ததற்கெல்லாம் கோபப்படுவேன், எரிந்துவிழுவேன். என் நிலையைப் பார்த்து என் தாய் எனக்கு அறிவுரை சொன்னார். அந்த அறிவுரைதான் என்னை மாற்றியது' என்றான். 'என்ன அறிவுரை?' என்று கேட்டான் நண்பன். 'யாரெல்லாம் உன்னைக் கோபம் கொள்ள வைக்கின்றார்களோ அவர்கள் உண்மையிலேயே உன்னை வென்றவர்கள் ஆகிறார்கள். நீ மட்டும் கோபம் கொள்ளாமல் இருந்தால் அவர்களை வென்றவன் ஆவாய் என்றார். ஒவ்வொரு முறையும் பிறர் என்னைக் கோபமூட்ட முயலும் போது நான் அவர்களை வென்ற பெருமிதத்தில் சிரித்துக் கொண்டே இருந்து விடுகின்றேன். இதனால் எனக்குக் கோபமே வருவதில்லை' என்று விளக்கம் சொன்னான் இளைஞன்.

பேராசிரியர் எ. சோதி

## தொண்டு நிறுவன உதவியுடன் மாநகர எல்லைக்குட்பட்ட குளங்கள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள குளங்கள், பொதுக் கிணறுகள் புனரமைப்பு பற்றி ஆராயும் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை பி.ப 4 மணியளவில் மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட, பகுதியில் உள்ள சனசமூக நிலையப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் நீர்ப்பாசன, மின்சக்தி எரிபொருள் அமைச்சின் மேலதிக செயலாளர் ஜே. துரைராஜரெட்ணம் கலந்து கொண்டு இப் புனரமைப்பு பணிகளுக்கு சனசமூகநிலையப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பும், சம்மதமும் தேவை யென்பதை எடுத்து விளக்கினார்

மாதிரிக்கு சில குளங்களைப் பார்வையிட்டுச் சென்ற அவர், தொண்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் விரைவில் திட்டங்கள் வகுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (உ-223)

## முகடு விழுந்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

கடும் மழையினால் வீட்டு முகடு உடைந்து விழுந்ததில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இருபாலையைச்சேர்ந்த கே.விஜயராணி (வயது 31) என்ற பெண்ணே காயமடைந்தவராவார். (ந-10)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ர்விடுதலைக்கூட்டணி ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான சட்டமாமேதை ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவுதினக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். தலைமைச் செயலகத்தில் நடை பெறவுள்ளது. (உ-5)

## இராசி பலன்

3.2.2002

(தை 21, ஞாயிறு)

சஷ்டி பி.ப 3.47 வரை

சித்திரை மு.இ 10.49 வரை

ராகுகாலம் 5.05- 6.35

நல்லநேரம்-9.35-11.05

சித்தம்

**மேடம்**
சுவாரஸ்யம், நண்பர்கள் சந்திப்பு,காரிய அனுகூலம், தனவரவு.

**இடபம்**
தொழில் மேன்மை,முயற்சி கைகூடும்,மனமகிழ்ச்சி,உடல் நலம்.

**மிதுனம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், குடும்பக்கவலை.

**கடகம்**
உடல் நலக்குறைவு, தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம்,பிரயாணம்.

**சிங்கம்**
நினைத்த காரியம் கைகூடும், தனவரவு, குடும்ப நன்மை,கூட்டு முயற்சி.

**கன்னி**
மாதர் நட்பு,முயற்சி தாமதம்,கௌரவக்குறைவு, வீண் வார்த்தை.

**துலாம்**
புதிய பொருள் சேர்க்கை, ஜனவசியம்,காரியம்கைகூடும் கற்பனை மிகுதி.

**விருச்சிகம்**
வீண் கோபம், பொருள் விரயம்,காரிய தாமதம், பிரயாணம்.

**தனுசு**
கீர்த்தி,பொருள்சேர்க்கை, தெய்வசிந்தை, உறவினர் சந்திப்பு.

**மகரம்**
கீழ்ப்படிவு,அதிக பிரயாசை, தூரதேசச் செய்தி,தொழில், முன்னேற்றம்.

**கும்பம்**
புதிய தொழில் சிந்தை, அச்சமான நிலை, திடீர் பயணம்,வயிற்றுக்கோளாறு.

**மீனம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், வியாதி, போசன நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## 4 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/73 கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் அமைக்கப்பட்ட விழிப்புக்குழுவினர், கடந்த வெள்ளியன்று காலை அப்பகுதியில் கசிப்பு விற்பனை நிலையங்கள் நான்கினை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கசிப்பினைக் கைப்பற்றியதுடன், சம்பந்தப்பட்டவர்களையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இளைஞர்களின் இத்துணிகரச் செயலைப் பலரும் பாராட்டியுள்ளனர். (உ)

## கொழும்புத்துறைப் பகுதி வீதிகள் பலவும் ஒற்றையடி பாதைகளாக காட்சி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதிகளிலுள்ள வீதியோரங்களில் மரங்களும்,பற்றைச் செடிகளும் வளர்ந்து ஒற்றையடிப் பாதைகளாகக் காட்சி தருவதாகவீடுகளைப்பார்வையிடச் சென்று திரும்புகின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்புத்துறையில் சுவாமியார் லேன், வளன்புரம்,இலந்தைக்குளம் வீதி' 5 ஆம் ,4 ஆம் ,3 ஆம் குறுக்குத் தெரு,விபுலானந்தர் வீதி ஆகிய வீதிகளின் ஓரங்களிலேயே இவ்வாறு மரங்கள், பற்றைகள்பரவலாகவளர்ந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத்துறைப் பகுதி மக்களின் நன்மை கருதி உடனடியாக இவ்வீதிகளைச் சுத்தம் செய்து தருமாறு கோரி கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர்மன்றத்தினர் யாழ்.மாநகரமேயர் செல்லன் கந்தையனுடன் தொடர்பு கொண்டதையடுத்து ஓரிரு தினங்களில் வீதிகளைச் சுத்தம் செய்து தருவதாக அவர் உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3,23)

## ஐ.சி.ஆர்.சியிடம் உதவி கோரல்

யுத்த நிறுத்த காலத்தில் மேற்கொள்ள வேண்டிய மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசும்,விடுதலைப்புலிகளும் ஐ..சிஆர் சியின் உதவியைக் கோரியுள்ளதாக ஐ. சி. ஆர்.சியின் ஊடகப் பேச்சாளர் அர்ச்சுனாரணவான நேற்று முன்தினம்தெரிவித்துள்ளார். (ந)

## சிறுவர்களான போராளிகளை பாதுகாப்பது குறித்து படையினர்க்கு கருத்தரங்கு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட சிறுவர்களான போராளிகளை பாதுகாக்கும் திட்டமொன்றை பாதுகாப்பு அமைச்சு வகுத்துள்ளது.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றை ஐக்கிய நாடுகளின் சிறுவர் கல்வி நிதியம், இலங்கை இராணுவ மனித வுரிமைகள் சபை என்பன இணைந்து நடத்திவருகின்றன.

சிறுவர்களான போராளிகளை பாதுகாப்பது தொடர்பான விடயங்களை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விளக்குவதே இந்த கருத்தரங்கின் நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## விளைச்சலை எதிர்பார்த்த விவசாயிகள் மழையால் மனம் வேதனை

(கொழும்புத்துறை)

கடந்த இரு தினங்களாக யாழ். குடாநாட்டில் பெய்து வரும் அடைமழையினால் பெரும்போக நெற்செய்கையாளர் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதுடன், உப உணவுப் பயிர்ச்செய்கையாளரும் பேரழிவைச் சந்தித்துள்ளனர்.

நெல் அறுவடை செய்ய விருந்ததும்அறுவடைசெய்யப்பட்டு வயல்களில் அடுக்கப்பட்டிருந்ததுமான இந் நிலையில் திடீரென ஏற்பட்ட இப் பெருமழையால் பாடுபட்ட விவசாயிகள் விளைவை எதிர் பார்த்திருந்த இவ்வேளையில் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தவிரவும்,பாதை திறக்கப்படும்பட்சத்தில்கொழும்புக்கு ஏற்றுமதி செய்து நல்ல வருவாயைப் பெற முடியும்என்ற நம்பிக்கையில் எரிபொருள், உரத்தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு மத்தியிலும்வெங்காயம் மற்றும் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் விளை நிலத்தில்வெள்ளம் தேங்கி பயிர்களை மூடி நிற்பதைக் கண்டு ஏங்கிநிற்பதையும் காண முடிகின்றது.

குறிப்பாகஅச்சுவேலிப்பகுதி விளைநிலங்களில் வெங்காயச் செய்கையே இம்முறை மேற்கொள்ளப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-233)

## சிந்தனைக்கு விருந்து

### வேடகாரச் சனிகள்

சாமிபேர் சொல்லிச் சாதுகளை ஏமாற்றி
நாமமிடும் நாசகா ரக்கும்பல் - சாமளவும்
விட்டுநீங் காப்பிணிகள் வேடகா ரச்சனிகள்
கட்டிஅடி போடுகண்டால்.

'பழையவன்'

# கடற்றொழிலுக்கு விதிக்கப்பட்ட தடைகள் நீக்கப்படமாட்டாது

## கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்படமாட்டாதென கடற்படைத் தளபதி தயா சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மைக்கல்பெரேராவுடன் நேற்று முன் தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்கு கடற் பகுதிகளான கொழும்பு, நீர் கொழும்பு போன்ற இடங்களில்மீன் பிடியில் ஈடுபடுவோர் கடற்படையினரால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டே இந்த பேச்சு வார்த்தை நடைபெற்றது.

மீன்பிடி தடை வலயங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படமாட்டாதென்றும் பொருளாதார மையங்களாக விளங்கும் துறைமுகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுமென்றும் தளபதி கூறியுள்ளார்.

இதேவேளை, மீன்பிடித் தடை வலயங்கள் காரணமாக மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு நஷ்டஈட்டை பெற்றுக் கொடுப்பதற்கு பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென சபாநாயகர் மீனவர்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் குடாப்பாடு, கற்பிட்டி, நீர்கொழும்பு, பள்ளியாவத்தை, பத்தலகுண்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (உ- 5)

## கேதீஸ்வர புனரமைப்பு

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனரமைப்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் மகாசிவராத்திரி தினத்தை அங்கு அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை இந்து கலாசார அமைச்சு எடுத்து வருகிறது.

இந்நிலையில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஆர். புவனேஸ்வரன் தலைமையில் 100பேர் உயர்தர வகுப்பு மாணவர்கள் இன்று திருக்கேதீஸ்வரம் சென்று ஆலய சுற்றாடல் பகுதிகளைத் துப்பரவு செய்யவுள்ளனர். (வ)

### மீன்பிடித் தொழிலை விருத்திசெய்ய

## ஆசிய அபிவிருத்தி வங்கி பெருமளவு நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி 80 மில்லியன் அமெரிக்கா டொலரை வழங்கியுள்ளதாக மீன் பிடி கடல்வள பிரதி அமைச்சர் மொகைதீன் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியைப்பயன்படுத்தி வடக்கு கிழக்கில் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு கிழக்கில் பிடிக்கப்படும் மீன்களுக்கு நியாய விலையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் கூறியுள்ளார். (5)

### பிந்துனுவெவ தமிழ் இளைஞர்கள்

## படுகொலை விசாரணை 3நீதிபதிகள் முன்னிலையில்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவபுனர் வாழ்வுமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்களின் படுகொலைகள் மற்றும் 14 இளைஞர்களைக்காயப்படுத்தியமை தொடர்பான விசாரணைகள் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இடம்பெற வேண்டுமென உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் என் சில்வா நேற்று உத்தர விட்டுள்ளார்.

பிந்துனு வெவ படுகொலைகள் தொடர்பாக இது வரை 41 பேருக் கெதிரான குற்றச் சாட்டுக்களை சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ளார். (ந-4)

## கண்ணிவெடித் தாக்குதல் பொலிஸார் இருவர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோஜிசத் தீவிரவாதிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 2 பொலிஸார் கொல்லப்பட்டதுடன், 7 பொலிஸார் காயமடைந்தனர்.

பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொருட்டு தனகூன் மாவட்டத்திற்கு சென்றுகொண்டிருக்கையில், பொலிஸ் வாகனம் கண்ணிவெடித்தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## மக்கள் அபி. நிறுவன அங்குரார்ப்பணம் இன்று

(யாழ்ப்பாணம்)

மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம், இன்று மு. ப 10 மணிக்கு யாழ். பஸ்ரியான் ஹோட்டலில் முன்னாள் உதவி மேயர் பி. எவ். சேவியர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பின்தங்கிய சகல மக்களினதும் பொருளாதார, சமூக விடிவை மையப்படுத்தி அரசியல், இன வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று உழைப்பதை இலக்காகக் கொண்டு செயற்படவுள்ள இந்த அரசுசாரா நிறுவனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்;

நிறுவனத்தின் நோக்கம், செயற்பாடுகள் என்பனபற்றி விரிவாக விளக்கப்படவுள்ளது. (உ-3)

## அரச பகுப்பாய்வாளருக்கு நஞ்சு ஊசி அனுப்பிவைப்பு

(கொழும்பு)

பொரளை மகசீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 2கைதிகளுக்கு ஊசிமூலம் நஞ்சூட்டப்பட்டமை தொடர்பாக பொறளைப் பொலிஸார் புலன் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதனடிப்படையில் சிறைச்சாலையிலுள்ள ஒருவருக்கு நஞ்சை வழங்கி அதனைக் குறித்த இருவருக்கும் ஊசி மூலம் ஏற்றும்படி ஏற்பாடு செய்தவரை கண்டுபிடிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

நஞ்சை ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஊசியும் மீட்கப்பட்டு அரச பகுப்பாய்வாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ)

## மறியல் போருக்கு சலன சித்திரம் ஒத்துழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மீனவ சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும்மறியல் போராட்டத்திற்கு 'சலன சித்திரம்' நிறுவனம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன் மேற்படி நிறுவனத்தின் பொதுச் செயலாளர் க.தேவதாசன் தலைமையிலான குழுவினர் தமது ஒத்துழைப்பையும் நல்கிவருகின்றனர்.

அரசியல் கலப்பற்றதாக இப்போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமானால் சுதந்திர தினத்திற்கு முன்பு இதற்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதைத்தவிர அரசுக்கு மாற்று வழி கிடையாது.

கடந்த 20 வருடங்களாக முடங்கிக்கிடந்த வர்க்கப் போராட்டம் மீண்டும் உயிர் பெற்றுள்ளமை தேசிய இனப் பிரச்சினையிலும் கணிசமான மாற்றத்தைக் கொண்டு வரும்.

பாதுகாப்பு காரணங்களைக் கூறி மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசின் நடவடிக்கைகள் தொடர்வது இனியும் ஏற்றுக் கொள்ள முடியாது என இது தொடர்பாக பொதுச் செயலாளர் தேவதாசன் கருத்து தெரிவித்துள்ளார். (உ-106)

# இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் அரிய சந்தர்ப்பம் இதுவே ஆகும்!

## சுதந்திரதினச் செய்தியில் டக்ளஸ் எம். பி

(கொழும்பு)

நாட்டில் 54வது சுதந்திர தினத்தன்று, நாட்டு மக்கள் ஒவ்வொருவரோடும் பகிர்ந்து கொள்வதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று சுதந்திரதினச்செய்தி என்று குறிப்பிட்டு, பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஐம்பத்திநான்காவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் அனைவரோடும் நாமும் எமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறோம். ''ஆடுவோமே பள்ளுபாடுவோமே'' என்று துள்ளிக்குதித்ததமிழ்க் கவிஞன் மகாகவி பாரதி ஆனந்த சுதந்திரம் என்பது பற்றி விளக்குகையில்:- பறங்கியைத் துரை என்ற காலமும் போச்சே எனக் குறிப்பிட்டு, அந்நிய ஆதிக்கம் அகலுவதை மட்டுமன்றி, சமூகத்தின் அனைத்துவிதமான ஏற்றத் தாழ்வுகளும் களையப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தி இருந்தான். அச்சமும், பேடிமையும், அடிமை சிறுமதியும் அகன்றுவிடும் நிலைமையையே உண்மையான விடுதலை என்று பாரதி ஆர்ப்பரித்து இருந்தான்.

எமது நாட்டைப்பொறுத்தவரையில் அந்நிய ஆதிக்கம் அகன்று 54 ஆண்டுகள் கடந்துள்ள போதும், பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அமைதிப் பூங்காவாக நாட்டை மாற்றிக்கொள்ள இன்னமும் இயலவில்லை. தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக் கூடிய நியாயமான தீர்வைக் கண்டு அமுல்படுத்த முடியவில்லை. கௌரவமான சமத்துவ உணர்வுகளை நாட்டு மககள் ஒவ்வொருவரும் உணரக் கூடிய சூழ்நிலை இன்னமும் பிறப்பெடுக்கவில்லை.

கவலைக்கு உரியதான இந்த நிலைமையைமாற்றியமைத்து ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வைக் கட்டி எழுப்ப வேண்டியது, காலம் எமது தோழ்களில் சுமத்தியுள்ள வரலாற்றுக்கடமையாகும். நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் பிரதான இரு கட்சிகளும் பங்கு வகிக்கின்ற இன்றைய கால கட்டம். தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரியதொரு அரிய சந்தர்ப்பமாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் கண்டடைய வேண்டியது, தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் ஒவ்வரினதும் பொறுப்பாகும்.

கடந்த காலங்களில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் என்னென்பதை இனங்கண்டு, தகுந்த முறையில் பொருத்தமான மாற்று வழிகளைக் கையாளவும் பொறுப்புணர்வுடன் பிரச்சினைக்கு முகம் கொடுக்க இதுவொரு தக்க தருணமாகும்.

அழிவுகளைத் தருவிக்கின்ற மோதல்கள் அற்ற சூழலில் 54வது சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது. இது தொடர்ந்தும் நிலைபெற்று ஆக்கபூர்வமான வகையில் முன்னேறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சுதந்திர தினத்தை நாட்டு மக்கள் ஒவ்வொருவரோடும் பகிர்ந்து கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மின் இணைப்பு

(ஏழாலை)

ஏழாலை மேற்கு சிவன் கோவில் வீதிக்கு அண்மையில் மின்சார சபையால் மின் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. (உ-206)

## மீளாய்வு

(ஏழாலை)

ஏழாலை மேற்கு J/201 கிராம அலுவலர் பிரிவில், பதிவுகளை மேற்கொண்டுள்ள நிரந்தர, தற்காலி உத்தியோகத்தரினது உலர் உணவு அட்டைகள் கிராம அலுவலரால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை மீளாய்வுகளை மேற்கொள்ளாதவர்கள் அனைவரும் உடனடியாக கிராம அலுவலரை சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3,206)

## திரைப்பட தொழிநுட்ப பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனச்சித்திரம்' நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வரும் இலவச திரைப்படத் தொழிநுட்ப பயிற்சி வகுப்பு இன்று பி.ப. 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திரைக்கதை, இயக்கம், பாடல், ஒலி, ஒளிப்பதிவு' நடிப்பு, இசை தொடர்பான விரிவுரைகள் இடம்பெறவுள்ள இவ்வகுப்பில் ஏற்கனவே நடத்தப்பட்ட வகுப்புகளில் கலந்துகொள்ள முடியாமற் போனவர்களும் இத்துறை சார் ஆர்வலர்களும் இணைந்து கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-106)

## 54-வது சுதந்திரதினம் நாளை அனுஷ்டிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 54 ஆவது சுதந்திர தினம்நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியில் சுதந்திர தினம்அனுஷ்டிக்கப்படவுள்ள போதும், இந்நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்தித்திட்டத்தில் ( NECORD) திட்ட முகாமைப்பிரிவில் சிரேஷ்ட திட்டமிடுபவர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிராந்திய திட்டமிடல் அல்லது பொருளியலில் பல்கலைக்கழக பட்டம், திட்டமிடல் அல்லது பிராந்திய திட்டமிடலில் ஆகக்குறைந்தது 10 ஆண்டுகள் வேலைஅனுபவம் உடையவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் திட்டப்பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமூக மீள் குடியேற்றல் மற்றும் அபிவிருத்தித் திட்ட ( NECORD) அலுவலகம், 140 பவர்ஹவுஸ்வீதி திருகோணமலை என்றமுகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# உங்கள்பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

## ★ சோதிட பலன் ★

**டாக்டர் எம்.வி.ராமன்**
சோதிட வித்தகர்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அனுஷம் நட்சத்திரம்

அனுஷம் நட்சத்திரம் சனிக்குரியது. 17வது நட்சத்திரம். உங்களுக்கு எப்போதும் திருவோணம் நட்சத்திரம்நன்மைக்குரியது. தாரா பலன் 6க்கு காரிய சாதனை.. அதிபதி சந்திரன், வாகனம் ஐம்புகம். அதிபுதி பலன் புகழ். வாகனப் பலன் சுகவிருத்தி. சந்திரன் பலன் அமாவாசை கழிந்து 3வது நாள் எல்லா சுபகாரியங்களும் செய்யலாம். இதன் பலன் திரவிய லாபம். எனவே இந்த நாளில் புதிய தொழில் ஆரம்பம் செய்ய, தொழில்கூட்டுசேர்க்க கிணறு எடுக்க மிகமிக சிறப்பான நாளாகும். பசு, கன்று, மாடு போன்ற பண்ணைஆரம்பம் செய்ய சிறப்பான நாளாகும்.

திங்கட்கிழமை திருவோணம் நட்சத்திரம் வரும் நாள் அமிர்தயோகம் வரும். ஆனந்தாதி யோகத்தில் சித்த யோகம். இதன் பலன் சகல காரிய சித்தி. இந்த நாளில் எல்லாவிதமான காரியங்களும் செய்ய முயற்சிக்க காரிய சாதனைஉண்டாகும். இதற்கு முன்பு முயன்று முடியாதகாரியங்களையும், இந்த நாளில் செய்ய முழு வெற்றி கிடைக்கும். கௌரிபஞ்சாங்க காலம் காலை மணி 6 முதல் 7க்குள் எந்தக் காரியமும்செய்யஏற்ற காலம். கல்யாணம், காதல், கடிதத் தொடர்பிற்கும் ஏற்ற நாள்.

புதன் கிழமையில் திருவோணம் நட்சத்திரம் வரும் நாள் சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் இது சந்திரன் யோகமாக வரும். இதன் பலன் எத்திக்கிலும் சுபம் உண்டாகும். இது அனுஷ நட்சத்திரம் உடையவர்களுக்கு மட்டுமே. இந்த நாள் மனைமுகூர்த்தம்செய்ய கிணறு, கட்டடம் கடைக்கால் போடவும் சிறப்பான நாள். கௌரி பஞ்சாங்க காலம் இதே புதன் கிழமையில் காலை மணி 9க்குமேல் 10 மணிக்குள்ளாக வாகன சம்பந்தமான தொழில் துவங்க, கலை சம்பந்தமான பூஜை போடவும் ஏற்ற நாள். எழுத்துவகை முயற்சி, புத்தகம் எழுத ஆரம்பிக்கவும் ஏற்ற நாள் இதுவும் அனுஷம் நட்சத்திரம் உடையவர்களுக்கே. வியாழக்கிழமையில், திருவோணம் நட்சத்திரம்வரும் நாள் சித்த யோகம் வரும். ஆனந்தாதி யோகத்தில் குவஜயோகம் உதயமாகும். இதன் பலன் பொருள் சேர்க்கை. இக்காலமும் உங்களுக்கு பலவழி பொருள் சேர்க்கை, பல வழிநன்மைக்கு வழி வகுக்கும். உங்கள் எல்லா வகையான சுப முயற்சிகளையும் இந்த நாளில் வைத்துக் கொள்ள வெற்றிபெறுவீர்கள். கௌரி பஞ்சாங்க காலம் சூரியன் உதயம் மணி முதல் ஒரு மணி நேரத்துக்குள் அனைத்து சுபங்களுக்கும் ஏற்ற நாள், கிருகப்பிரவேசம், பணம் கோலுவதற்கும் ஏற்ற நாள்.

அனுஷம்நட்சத்திரத்திற்கு- வேதை (ஆகாத நட்சத்திரம்- பரணி, திருமணம் செய்ய தொழில் கூட்டு சேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள் 6 (ரச்சு), அவைகள்- பரணி, பூரம், பூசம், அனுஷம், பூராடம், உத்தரட்டாதிஆகியவைகள், அதிர்ஷ்டமலர்- குவளை மலர், அனுகூலதெய்வம்- எமதருமர், சூரியன், அதிர்ஷ்டக் கல்- நீலக்கல், அதிர்ஷ்ட நிறம்- நீலம், கறுப்பு, அதிர்ஷ்ட எண்-8.

கேட்டை நட்சத்திரம்

இது புதனுடைய நட்சத்திரம். இந்த நட்சத்திரத்திற்கு அச்சுவினி நட்சத்திரம் சுபம் செய்யும் நட்சத்திரம் ஆகும். தாராபலன் இரண்டுபொருள் சேர்க்கை. அதிபதி பலன் காந்தி, வாகன பலன் அத்தனையும் லாபமே, சந்திரன் பலன் அமாவாசை கழிந்த 6 வது நாள் எதைச் செய்தாலும் நன்மையே. இதன்பலன் சத்துருக்கள் அழிவு, நோய், கடனுக்குப் பலம் இழப்பு, வழக்கு வெல்லும். திங்கட்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள் நல்லதல்ல இதை விலக்கவும். திங்கள் கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும் நாளில்காலை மணி 6 முதல் 7 க்குள் எந்தக் காரியமும் செய்ய நன்மையாகும். என்றாலும் இது அவ்வளவு சிறப்பான நாளாகக் கூறமுடியாது. எனவே, அவசியம், அவசரம் என்றால் மட்டும் உபயோகப்படுத்தலாம்.

கேட்டை நட்சத்திரத்திற்கு வியாழக்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள் அமிர்தயோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம்- இது உங்களுக்குச் சிறப்பான நாள் என்பதால், சகல காரியங்களும் செய்யலாம். இது ராஜ சன்மானம் அளிக்கும் நாள் என்பதால், அரசாங்கம், அரசியல் சார்புடைய போட்டி, தேர்வு போன்றவைகளில் கலந்து கொள்ள முயற்சிகள் ஆரம்பம் செய்ய ஏற்றநாள். கலை சம்பந்தமான முயற்சிகளுக்கு ஏற்ற நாள். மற்றும் இதே வியாழக்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள் காலை மணி 6.00 முதல் 7 க்குள் குரு ஓரையில், உங்கள் சுபகாரியங்கள் அனைத்தும் வைத்துக்கொள்ளலாம். திருமண சம்பந்தமான முயற்சிகளுக்கும் தொழில் ஆரம்பம் செய்யவும் ஏற்றநாள், வெள்ளிக்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும்நாள் அமிர்தயோகம் உதயமாகும். இது வச்சிரயோகம் உடைய நாள். இது உங்களுக்கு எந்த வகையிலும் நன்மைக்குரிய நாள் அல்ல. எனவே, பொதுவாக வெள்ளிக்கிழமையை உங்கள் சுபமுயற்சிகளுக்கு விலக்குவது சிறப்பாகும். இதே வெள்ளிக்கிழமையில்- அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள்- பகல் மணி 1.00 முதல் 1. 30 க்குள் (சூரியன் உதய நிமிடங்களை இதனுடன் கூட்டிக் கொள்ளவும்) உங்களுக்கு அவசியம், அவசரம் என்றால் எல்லா சுப நிகழ்ச்சிகளையும் இந்தக் காலத்தில் வைத்துக்கொள்ளலாம்.

கேட்டைநட்சத்திரகாரர்களுக்கு- வேதை(ஆகாதநட்சத்திரம்)- அச்சுவினி. திருமணம் செய்ய, தொழில் கூட்டு சேர்க்க, உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள் 6 (ரச்சு), அவைகள்- அச்சுவினி, ஆயிலியம், மகம், கேட்டை, ரேவதி, மூலம் ஆகியவைகள். அதிர்ஷ்டமலர்- வெண் காந்தள். அனுகூல தெய்வம்- காளிமாதா. அதிர்ஷ்ட கல்- மரகதம். அதிர்ஷ்ட நிறம்- பச்சை (இருள்பச்சை) அதிர்ஷ்ட எண்- 9,

குறிப்பு:

அச்சுவினி நட்சத்திரம் முழுநட்சத்திரம் என்பதால் எல்லா வகையான சுபங்கள் செய்யவும், பொதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மகம், மூலம் நட்சத்திரங்களும் அந்த வரிசையில் வருகின்றன. எனவே உ களுக்குச் சுபங்கள் செய்ய மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. (இதுபொது)உங்கள் கேட்டை நட்சத்திரத்திற்கு நன்மைசெய்யும் நட்சத்திரங்கள் அல்ல இந்தமகம், மூலம், அச்சுவினி ஆகியவைகள். (தொடரும்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக்கான கலந்துரையாடல் மு. ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ளபளைப் பிரதேச செயலக உபஅலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக முன்பள்ளி ஆசிரியைகள் சங்கத் தலைவி செ. சிவரஞ்சிதம் தெவித்துள்ளார். (உ)

## திருட்டுக் குறித்து படைத் தளபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீளக்குடியமராத பூம்புகார் மணியந் தோட்டப் பகுதிகளில் தொடரும் திருட்டுக்கள் தொடர்பாக யாழ்.மாநகர மேயருக்கு அப்பகுதி மக்கள் கொடுத்த முறைப்பாட்டினை யடுத்து.

512வது படையணியின் அதிகாரிக்கு இது குறித்து விளக்கமான கடிதம் ஒன்றினை மேயர் செல்லன் கந்தையன் அனுப்பி வைத்திருப்பதுடன் நேரடியாகச் சந்தித்தும் கதைக்கவுள்ளார் (உ-19)

## வீதியைமூடி வெள்ளம்

(காரைநகர்)

பெய்து வரும் மழையால் காரைநகர் மேற்கு சக்கலாவோடை புது வீதி உட்பட பல வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் போக்குவரத்திற்கு மக்கள் மிகுந்த கஷ்டமுறுவதுடன் பாயும் வெள்ளம் மக்களை அடித்துச் செல்லும் அளவுக்கு பயங்கரமாய் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ-246)

## பொதுக் கூட்டம்

யாழ்.கல்வி வலய ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் எதிர் வரும் 15 ஆம்திகதிவெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ். வலய கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே 8ஆம்திகதிக்குமுன் புதிய நிர்வாகசபையின் அங்கத்தவர்களின் நியமனப்பத்திரங்களை ச்சமர்ப்பிக்கும் படி செயலளார் ரி. இராசலிங்கம் அறிவித்துள்ளார். (உ-10)

## விளையாட்டில் விபரீதம் இருவர் வைத்தியசாலையில்

(சுண்டுக்குளி)

யாழ். பிரதேச செயலர்பிரிவிற்கு உட்பட்ட அணிகளுக்கிடையே இடம் பெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் பங்கு கொண்ட இரு அணிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் பி.ப. 4.40 மணிக்கு சென். அன்ரனீஸ் அணிக்கும் குருநகர் அணிக்கும் இடையே ஆரம்பமான ஆட்டம் நிறைவு பெறுவதற்கு ஒரு நிமிடம்இருக்கும் வரையில் கோல் எதையும் போடவில்லை.

இந் நிலையில் சென். அன்ரனீஸ் கோல்கீப்பர பந்தை பிடிக்க எத்தனிக்கையில்எதிர் அணி வீரரினால் மூர்க்கத்தனமான முறையில் தாக்கப்பட்டார். இதனை அவதானித்த நடுவர் ஆட்டத்தை நிறுத்தினார்.

அதேவேளை சென். அன்ரனீஸ் அணி வீரர் ஒருவர் தாக்கிய எதிரணி வீரரைஏன்தாக்கினார் என்று கேட்டதன் விளைவாக இருவருக்குமிடையில் கைகலப்புஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து குருநகர் கழக ஆதரவாளர்கள் மைதானத்திற்குள் பிரவேசித்து சென். அன்ரனீஸ் வீரர்களைத் தாக்கினார்கள். இவ்வேளையில் கடமையில் நின்ற பொலிஸார்தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் மோசமான தாக்குதலுக்குள்ளான சென். அன்ரனீஸ்வீரர்கள் கெவின், மதன் ஆகிய இருவரையும் யாழ்.மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இவ்அசம்பாவிதம் தொடர்பாக போட்டி ஒழுக்காற்றுக் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-110)

## விவசாய உற்பத்திப் பொருட்களை தடைமுகாம்களில் இறக்கவேண்டாம்

### கட்டளை அதிகாரி கடும் உத்தரவு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு' தென்மராட்சிபிரதேசங்களிலிருந்து கொண்டு வரும் விவசாய அறுவடைப்பொருட்களைத்தடை முகாம்களில் இறக்கி ஏற்ற வேண்டாமென மாலுசந்தி இராணுவ முகாம் கட்டளை அதிகாரி மேஜர் பேட்டி பெரேராபடை அதிகாரிகளுக்குஉத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வயல்களில் நீர் நிறைந்திருப்பதால் விவசாயிகள் நெற்கதிர்களை சூடு அடிக்காது கொண்டு வரும்போது தடை முகாம்களில் பறிக்கப்பட்டு சோதனையின் பின்ஏற்றப்படுவதால் நெல்மணிகள் உதிர்வதுடன் மேலதிகச் செலவும் ஏற்படுகின்றது.

எனவே இதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கமாற்று ஒழுங்குகளை செய்யுமாறு வடமராட்சி தொழில்சார் அமைப்புக்களின் பண்பாட்டு பேரவை பிரதிநிதிகள் கட்டளை அதிகாரி பேட்டி பெரேராவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதனையடுத்துதடை முகாமிற்குவிஜயம்செய்தகட்டளை அதிகாரி பொருட்களை ஏற்றி இறக்கும் அவல நிலையை நேரில் கண்டதுடன் அவர்களுடன் உரையாடி நிலைமையைக் கேட்டறிந்தார்.

இதனையடுத்து விளை பொருட்களை ஏற்றி இறக்க வேண்டாமென சகல படை அதிகாரிகளுக்கும் அவர் பணித்துள்ளார்.

அதேவேளை, தடை முகாம்களில் பொருட்களை இறக்கும் சம்பவங்கள் நடைபெற்றால் உடன் தமது கவனத்திற்கு கொண்டு வருமாறு பிரதிநிதிகளிடம் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## காலநிலை சீரின்மையால் சீருடை வழங்கல் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களின் சீருடை மற்றும் இலவச பாடப்புத்தகங்களின் வைபவ ரீதியான வலயக்கல்விப் பணிப்பாளர்களிடமான கையளிப்பு நேற்று, திட்டமிட்டவாறு இடம்பெறவில்லை.

70 வீதமான சீருடைத் துணிகளும் 50 வீதமான இலவச பாடப்புத்தகங்களும் மாத்திரமே யாழ். மத்திய கல்லூரியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதனாலும்.

காலநிலை சீரின்மை காரணமாக எஞ்சியவை கப்பலில் இருந்து இறக்கும் பணி தடைப்பட்டதாலுமே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், 6 ஆம் திகதியளவில் இலவச சீருடை பாடப்புத்தகங்கள் என்பனவற்றை விநியோகிப்பது ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (உ)

## அசம்பாவிதங்களைத் தடுக்க விசேட கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் போது அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாது தடுக்கும் நோக்குடன் பாதுகாப்புத் திட்டங்களை அமுல் செய்வதற்கு விசேட கண்காணிப்புக் குழுவொன்று பொலிஸ் தேர்தல் செயலகப் பணியகத்தால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் செயற்படவுள்ள இக் கண்காணிப்புக் குழுவினால், அனைத்து மாவட்டச் செயலகங்களிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# மனிதநேயமும், சேவையில் அர்ப்பணிப்புமே

# இறையரசின் மக்கள், தகுதிக்கு இட்டுச்செல்வன

**அமல அருள்தாசன்**



உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட வாழ்க்கையே தலைசிறந்த பெருமையுள்ள வாழ்க்கையாகும்.

## பரமபிதா காட்டியபாதை

இவ்வாறான வாழ்வைத் தனதாக்கிக் கொள்பவர்கள் எத்தனைபேர். பணத்துக்காகவும்,பொன், பொருளுக்காகவும் உயர்ந்த இலட்சியங்களை விட்டு விட்டு தாறுமாறான வாழ்வை வாழ்கின்றனர்.குறுகிய கால உயர்வுகளை அடைவதற்கு பிழையான நியாயப் படுத்தல்களை முன்வைக்கின்றார்கள். 'கண்ணியமான மனிதன் எப்போதும் நீதியின் வழியே சிந்தனை செய்கிறான்' என்று சிந்தனையாளர் ரூசோ கூறுவது நோக்கத் தக்கதாகும்.

ஏழைகளை நேசித்தார்

'மனிதக் கணிப்பின் படி உங்களில் ஞானிகள் எத்தனை பேர்? வலியோர் எத்தனை பேர்? உயர் குடிமக்கள் எத்தனை பேர்? ஆனால் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமையென உலகம் கருதுபவற்றை தேர்ந்து கொண்டார்'. (1 கொரி 1: 26-27 ) துன்பத்தைக் கண்டு இரங்குதல் மனிதாபிமானம், அதனை நீக்குவதே தெய்வீகம் இன்றைய நவீன சமூகம் புதுமைகளை வரவேற்பதால் பழமைக்கும், ஏழ்மைக்கும் மதிப்பளிப்பது அரிதாகி வருகின்றது. ஆனால் இயேசு ஏழைகளையே அதிகம் நேசித்தார்.ஏழ்மை உள்ளங் கொண்டவர்களே விண்ணரசுக்கு உரிமையானவர்கள் என்று மொழிந்தார். துயருறுவோர், கனிவுடையோர், நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர். இரக்கமுடையோர்,தூய்மையான உள்ளத்தோர், நீதியின் பொருட்டு துன்புறுவோர் அமைதியை ஏற்படுத்துவோர் இவர்கள் தான் கடவுளின் மக்கள் எனப்படுவர்.

நற்பண்புகளைச் சேகரி

கிறிஸ்தவர்களின் பெருமையும்,ஞானமும் கிறிஸ்துவே. பெருமை பாராட்டுவோர் கிறிஸ்துவிலே பெருமை பாராட்டட்டும் என்று புனித பவுல் எம்மைத் தட்டியெழுப்புகின்றார். கிறிஸ்துவின் அன்பும்,பண்பும் எம்மிலே மலரவேண்டுமென்றால் அவரது பாதச் சுவடுகளைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும். அப்போது அவரது அருள்துணை நிச்சயமாக எமக்குக் கிடைக்கும். தேனீக்கள் நறுந்தேனைச் சேகரிப்பது போல் மற்றவர்களிடமுள்ள நற்பண்புகளைச் சேகரித்து நமதாக்கிக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். பெருமையை மூன்று அறிகுறிகளால் தெரிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை, செயலில் இனிமையும் மனிதத்தன்மையும், வெற்றியில் வெறியின்மை என்று பிஸ்மாக் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

சேவையில் அர்ப்பணிப்பு

இறை உறவிலே நாம் வாழ வேண்டுமென்றால் எம்மிலே பிறரைக் காணவேண்டும். பிறரிலே இறைவனைக் காண வேண்டும். அப்போதே கடவுளின் ஞானம் எம்மில் வெளிப்படும். மனிதனை நேசிப்பதிலே கடவுள் நிறைவுள்ளவராக இருக்கிறார். மனிதனும் பிறரை நேசிப்பதில் நிறைவு பெற வேண்டும்.சேவையில் தன்னை அர்ப்பணிப்பவன்தான் மனிதன். அப்படித்தான் அவன் புனிதமடைகின்றான். நற்செயல்களுக்கான பலன் தாமதித்து வந்தாலும் நிச்சயம் வந்தே தீரும் என்பது அனுபவம் தரும் பாடமாகும்.

மனித வாழ்வின் உயர்வானது தன்னை வெளிப்படுத்துவதில் அல்ல. தன்னைத் தியாகம் செய்வதில்தான் அடங்கியுள்ளது. இயேசு தம் உயிரைத் தியாகம் செய்து எம் பாவங்களைக் கழுவித் தூய்மையாக்கினார். மனுக்குலத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் பல தியாகங்கள் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் இறையரசின் மக்களாகும் தகுதி எமக்குக் கிடைக்கும் இல்லையேல் எம்வாழ்வு போலியானதே.

---

### இனப்பிரச்சினை தீர்வு விவகாரம்

# அமெரிக்கா அழுத்தம் எதையும் கொடுக்காது

# இலங்கை அரசின் முடிவுக்கு ஆதரவு வழங்கும்

## ஆல்ஷி வில்ஸ் அழுத்தம் திருத்தமாக தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இரு நாடுகளாகப் பிளவுபடுவதை அமெரிக்கா ஒருபோதும் விரும்ப மாட்டாது.ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வும் பூரணமானதல்ல.இரு இனங்களுக்கும் இடைப்பட்ட சிறந்த அதிகாரப்பகிர்வு கொண்ட தீர்வை வழங்குவதால் மட்டுமே தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஓரளவு நிறைவாக அமையுமென அமெரிக்கா கருதுகிறது.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆல்ஷி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு அண்மையில் விஜயத்தை மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர் வைரவப்புளியங்குளத்திலுள்ள புளொட் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வவுனியா படைத் தளபதிகள், அதிகாரிகள் மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரைச் சந்தித்த தூதுவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் அரசும்விடுதலைப் புலிகளும் விட்டுக் கொடுப்புடன்நடந்து கொள்ள வேண்டும், இதற்கு பரஸ்பரநம்பிக்கையேஇருசாராருக்கும் அவசியம் தேவைப்படுகிறது.

சமாதானத்திற்காககிடைத்துள்ளஇறுதிச் சந்தர்ப்பத்தை இருசாராரும் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தமிழ்மக்களுக்கு இத்தகைய தீர்வுதான் வழங்கப் பட வேண்டும் என அமெரிக்கா ஒரு போதும்வரையறைசெய்ய மாட்டாது. தீர்வு காண வேண்டியது அரசினுடைய பொறுப்பாகும். அதற்கான சகல ஒத்துழைப்புகளையும் அமெரிக்கா வழங்குமென அமெரிக்கத்தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் உரையாற்றும் போது, தமிழ்மக்கள் அமைதியையே விரும்புகின்றார்கள்.அவர்கள் சகல உரிமைகளுடனும் வாழ்வதற்கு நிரந்தரஅமைதியான சூழலை எதிர்பார்க்கின்றார்கள.நாம் சமாதானத்திற்கு ஆதரவானவர்கள்,அதற்கு எதிரானவர்களல்ல, தமிழ்மக்கள் கடந்த இருபது வருடங்களாக இடம் பெற்றுவரும் யுத்தம் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

(வ-4)

---

### தினசரி தியானம்

#### ஊக்கம்

உடையரெனப்படுவது ஊக்கம் அஃதிலார்
உடையது உடையரோமற்று.

-திருக்குறள்.

ஊக்கமானது இடையறாது என் உள்ளத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் எந்தையே, என்னையாண்டும் ஊக்கமுடையவன் ஆக்குவாயாக.

ஊக்கமுடையவன் தனது ஊக்கத்தை ஒவ்வொரு சிறு செயலிலும் காட்டுகிறான். அவன் ஒன்றையும் புறக்கணிப்பதில்லை, அவசரப்படுதல் என்பதையும் அவன் அறியான், குற்றம் ஒன்றிலிருந்துதான் அவன் தப்பித்துக்கொள்ள முயலுகிறான். கேடுகளைக் கண்டு அவன் மனம் தளர்வதில்லை. நாளைக்கென்று எதையும் ஒத்திவைப்பதில்லை. இடையறாது செடி வளர்வது போன்று ஊக்கமுடையவனது உள்ளம் வளர்கிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

---

# ஜனாதிபதியை விசாரிக்கும் உரிமை

# நீதிமன்றத்துக்கு அறவே 'இல்லை

(கொழும்பு)

ஜனாதிபதியின் நடவடிக்கைகளை விசாரணை செய்யும் உரிமை நீதிமன்றத்துக்கு இல்லையென சட்டமா அதிபரின் சார்பாக ஆஜரான சொலிசிற்ற ஜெனரல் சி. ஆர். டிசில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கிற்கு ஜனாதிபதி பதவி நீடிப்பு வழங்கியமையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்வழக்கு விசாரணையின் போது சட்டமா அதிபரின் சார்பாக ஆஜரான சொலிசிற்ற ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசியல் யாப்பை ஜனாதிபதி மீறினால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முடியும்.

ஆனால், அவரை விசாரிக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு இல்லையென்று அவர் தெரிவித்தார். (உ-5)

---

## காய்ச்சலால் சிசு மரணம்

(மந்திகை)

காய்ச்சலினால் பீடிக்கப் பட்டிருந்த எட்டு மாத சிசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அரைமணிநேரத்தில் இறந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த புதனன்று பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

மணல்காடு குடத்தனையைச் சேர்ந்த நாகரட்ணம் மேரி அன்ரனிற்றா என்ற சிசுவே மரணமானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த திங்களன்று எட்டுவயது சிறுமி ஒருவர் காய்ச்சலினால் இறந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-23)

## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(மந்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

மன்றத்தின் தலைவராக ந. சற்குணராசா, உபதலைவராக இ. ஜெயபாலன், செயலாளராக எஸ் அருளானந்தம், உபசெயலாளராக ந. சிவபாலன் பொருளாளராக வ. ஸ்ரீ பிரகாஷ் ஆகியோர் உட்பட 18 பேர் கொண்ட செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(உ-3, 23)

## கற்றல் கற்பித்தல் கண் காட்சி

(யாழ்ப்பாணம்)

வலய மட்ட ஆரம்பக்கல்வி கற்றல் கற்பித்தல் சாதனப் போட்டியும் கண்காட்சியும் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமைநல் லூர்ஸ்தான.சி.சி (சாதனா) பாடசாலையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் கோட்டமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களை காலை8.00மணிக்கு முன் காட்சிப்படுத்துமாறு சம்பந்தப்பட்டஅதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ-10)

## திருமலை மீனவர்கள் ஆதரவு

(கொழும்பு)

யாழ்.செயலகம் முன்பாக மீனவர்கள் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான மறியற் போராட்டத்திற்கு திருமலை மாவட்ட மீனவர் அபிவிருத்தி மையம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மீன் பிடித்துறை அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். (உ-5)

## ஆலயம் புனரமைப்பு

(ஏழாலை)

ஏழாலை மேற்கு அன்னமகேஸ்வரர் ஆலயப் புனருத்தாரணம்செய்யப்பட்டு விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (உ-206)

### எதியோப்பிய-எரித்திரியஎல்லைப்பிரச்சினை

# ஐ. நா. சபையின் பாதுகாப்பு குழு இருநாடுகளுக்கும் விரைவில் விஜயம்

(அடிஸ்அபாபா)

கிழக்கு ஆபிரிக்க நாடுகளான எதியோப்பியா மற்றும் எரித்தியா, ஆகிய நாடுகளுக்கிடையில் நிலவிவரும் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஐக்கிய நாட்டு பாதுகாப்பு சபையின் பிரதிநிதிகள் அங்கு செல்லவுள்ளனர்.

இருநாடுகளுக்குமிடையில் நீண்டகாலமாக நிலவிவரும் இந்த எல்லைப் பிணக்கிற்கு ஒரு முடிவு கட்டும் வகையில் ஐ. நா. சபையின் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 20 ஆம் திகதி இருநாடுகளுக்கும் செல்லவுள்ளது.

எல்லைப் பிரச்சினை தொடர்பாக இருநாடுகளினதும் நிலைப்பாடுகளைக் கண்டறிவதுடன் இப்பிரச்சினை தொடர்பான உரிய தீர்வை காணும்முகமாக 5 நாள் மாநாடொன்றில் இக்குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டிற்கு நோர்வே தூதுவர் ஒலேபீற்றர் கொம்பிளே தலைமைதாங்குவார். (உ-5)

# உலக  தரிசனம்

### சட்டவிரோத குடியேற்றவாசிகள் செல்லும் படகுகளைப் பறிமுதல் செய்ய

# இத்தாலி கடற்படைக்கு அதிகாரம்

(ரோம்)

சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் இத்தாலியின் கடற்பரப்பினுள் நுழையும் படகுகள்மற்றும் கப்பல்களை பறிமுதல் செய்யவோ அல்லது அழிக்கவோ கடற்படையினருக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளதாக இத்தாலிய அரசு அறிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இத்தாலிய கடற்பரப்பினூடாக அந்நாட்டுக்குள் நுழையும் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்ததையிட்டே இத்தாலிய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாககடற்படையினருக்கு அதிகூடிய அதிகாரங்களைவழங்கும் பொருட்டு திருத்த சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் சில்வியோ செனோன் அமைச்சரவையில் பேசும்போது தெரிவித்துள்ளார்

இதேவேளை நூற்றுக் கணக்கான இலங்கையர்கள் உட்பட சீனர்கள் பங்களா தேஷ்நாட்டவர்கள்ஆகியோர் மாதாந்தம் இத்தாலியினுள் சட்டவிரோதமாக நுழைவதாகவும்.

இவர்களில் பெரும்பாலானோர் இத்தாலியில் தங்காமல் ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் வாழும் தமது உறவினர்களைச் சென்றடையும் பொருட்டே இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைவதாகஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## நெல் கொள்வனவுக்கு குறைந்த வட்டியுடன் வர்த்தகர்களுக்கு கடன்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சலுகைக் கடன் அடிப்படையில் பெரும்போக நெல்லை கொள்வனவு செய்வதற்கென இலங்கை வங்கி தனியார் வர்த்தகர்களுக்கு 12 சதவீத வட்டியுடன் கடன வழங்கவுள்ளது.

இலங்கை வங்கி, முன்னைய காலங்களில் 22 சதவீத வட்டியுடன் கடன் வழங்கியமையால், அரிசியின் விலைநாட்டில் உயர்வடைந்ததாக வர்த்தகர்கள் கொடுத்த முறைப்பாட்டிற்கு இணங்கவே இவ்வட்டி வீதக் குறைப்பு இடம்பெற்றது என இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் டபிள்யூ. எச். சிறிசேனா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இவ்வருடத்திற்கான பெரும்போக நெல்லை தனியார் கொள்வனவு செய்வதற்கென இலங்கை வங்கி 100 கோடி ரூபா பணத்தைக் கடனாக வழங்க ஒதுக்கியுள்ளது.

இதன் மூலம் தனியார் வர்த்தகர்களும் பாவனையாளர்களும் சலுகை விலையின் அடிப்படையில் அரிசியை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-8)

## எண்ணெய்க் குழாய் வெடித்து 3 பேர் பலி

(குவைத்)

குவைத்தின் வடபகுதியில் உள்ள எண்ணெய் குழாய், பாதையில் ஏற்பட்ட அமுக்கத்தினால் வெடித்ததில் 3 பேர் பலியானதுடன், 18 பேர் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பலியான மூவரும் குவைத்தின் எண்ணெய் நிறுவனத்தை சேர்ந்த தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## புகலிடம் கோருவோருக்கு புதிய அடையாள அட்டை பிரிட்டனில் அறிமுகம்

(லண்டன்)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரும் ஒவ்வொருவரும் விசேட அடையாள அட்டை வைத்திருக்க வேண்டுமென்று பிரிட்டன் அரசாங்கம் புதிய சட்டம் ஒன்றை பிறப்பித்துள்ளது.

இவ்வாறான செயல் பிரிட்டன் வாசிகளை விட புகலிடம் கோருவோருக்கு அரசு சுதந்திரம் வழங்குவதாக அமைவதுடன், இது ஒரு பாரபட்சமான செயல் எனவும் எந்த ஒரு பிரிட்டிஷ் பிரஜையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் பிரிட்டனின் மனித உரிமை காப்பாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விளக்கமளித்த பிரிட்டிஷ்அரசு சாதாரண பிரஜைகளுக்கும் புகலிடம் கோரி வருவோருக்கும் இடையில் வித்தியாசம்காட்டுவதற்காகவும், பிரிட்டனில் ஆள் மாறாட்டம் செய்வதை தடுப்பதற்காகவுமே இந்த அடையாள அட்டை நடைமுறைக்கு வந்துள்ளது என தெரிவித்துள்ளது.

இதேவேளை அண்மையில அமுலுக்கு வந்துள்ள இப்புதிய அடையாளஅட்டையில் புகலிடம் கோருவோரின் சகல விபரங்களும் அடங்கியுள்ளதாகவும் பிரிட்டன் அரசு குறிப்பிட்டுள்ளது. (உ-7)

## தொழில்துறை கண்காட்சி

(சென்னை)

இந்தியாவில் தோல் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தொழில்நுட்பத்தில் அதி கவனம் செலுத்த வேண்டும் என்று மத்தியவர்த்தகத் தொழில்துறை அமைச்சர் முரசொலிமாறன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையில் ஆரம்பமான 17 ஆவது தொழில்துறைக் கண்காட்சியைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறுஅவர் தெரிவித்தார்.

இந்த நான்கு நாள் கண்காட்சியில் 19 நாடுகளைச் சேர்ந்த 260 க்கும் அதிகமான பெரிய நிறுவனங்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

 விளையாட்டு செய்திகள் 

### இந்திய - இங்கிலாந்து அணிகளின்

## ஆறாவது ஒருநாள் போட்டி இந்தியாவில் ஆரம்பம்

(டில்லி)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான 6 வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று மும்பையில் ஆரம்பமாகவுள்ளது.

ஆறு ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட இத் தொடரில் இங்கிலாந்து அணி 2 போட்டிகளிலும் இந்திய அணி 3 போட்டியிலும் வென்று முன்னணியில் உள்ளன.

மேலும் இந்திய நேரப்படி இப் போட்டிகள் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக பெய்து வரும் மழையினால் இதனைப் பிற்போடும் சந்தர்ப்பமும் உள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. (உ-10,5)

## மும்முனைப் போட்டி தென்னாபிரிக்கா வெற்றி

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்கு பற்றும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன் தினம் இடம் பெற்ற போட்டியில் தென்னாபிரிக்கா அணி 67 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணியை தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைமாத்திரமே பெற்றுக்கொண்டது. (உ-5, 10)

## இந்தியசிம்பாவே அணிகளின் டெஸ்ட் போட்டிகள் 21 இல் ஆரம்பம்

(டில்லி)

இந்திய, சிம்பாவே அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டி எதிர் வரும் 21 ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட இத் தொடரில் பங்கு பற்றுவதற்கு எதிர் வரும் 12 ஆம் திகதிசிம்பாவே அணி இந்தியா செல்லவுள்ளது.

இவ் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டி 21 ம் திகதி தொடக்கம் 25 ம் திகதி வரையும் நாக்பூரில் இடம் பெறவுள்ளது. (உ-5,10)

## சந்தன கடத்தல் !வீரப்பன் சரணடையப் போவதாக தமிழக அரசுக்கு அறிவிப்பு

(சென்னை)

சந்தனக்கடத்தல்வீரப்பன் சரணடையப் போவதாக தமிழக அரசுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த இரு வாரத்துள் இரண்டாவது முறையாகத் தனது நெருங்கிய நண்பர் மூலம்இச் செய்தியை விடுத்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

இச் செய்திகள் தமிழகப் பத்திரிகைகள் மூலமாக விடுக்கப்பட்டுள்ளது.

பழநெடுமாறனைத் தலைவராகக் கொண்ட 5 பேர் கொண்ட குழுவை அனுப்பி வைத்தால் தான் சரணடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## சமாதானப் பேச்சா? எதிர்க்கிறது காங்கிரஸ்

(புதுடில்லி)

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலானபேச்சுக்கள் இந்திய மண்ணில் இடம் பெறுவதை முற்றிலும் எதிர்ப்பதாகக் காங்கிரஸ் கட்சி தெரிவித்திருக்கிறது.

இதேவேளை, இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்க்கவில்லையென்றும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (து)

## வேலை நிறுத்தத்தை கைவிடுமாறு அழைப்பு

(சென்னை)

தமிழக அரசிற்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைக் கண்டித்து உத்தேசிக்கப்பட்ட வேலை நிறுத்தத்தைக்கைவிடுமாறு மாநிலமுதல்வர் பன்னீர்ச் செல்வம்வேண்டுகோள் விடுத்தார்.

வருகின்ற 7 ஆம் திகதி தமிழக அரச ஊழியர்களும் ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்தை தொடர்வதென விடுத்த அறிக்கையைஅடுத்தே முதல்வர்இவ்வேண்டுகோளை விடுத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் பன்னீர்ச் செல்வம் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நிதிநெருக்கடி தீர்ந்தபின்னர் ஆசிரியர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் நிறுத்தி வைக்கப்பட்ட சலுகைகள் அனைத்தையும் வழங்கப் போவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை வேலை நிறுத்தத்தைத்தவிர்க்கஉள்த்துறைச் செயலர் சம்பந்தப்பட்டவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். (து)

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணை
குறள்

# வலம்புரி

## புகழ் தேடும் பயணம்!

அரசும், விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடித்து வரும் இவ்வேளையில், தென்னிலங்கை அமைச்சர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் செல்வதில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறு அமைச்சர்கள் வன்னிக்கு செல்வது, அங்கு வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, அதனைத்தீர்ப்பதற்காக அல்ல, மாறாக தென்னிலங்கை சிங்கள மக்கள் விடுதலைப்புலிகளை உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கின்றனர். அவ்வாறு சிங்கள மக்களால் மதிக்கப்படுகின்ற விடுதலைப் புலிகளை வன்னிசென்று சந்திப்பதன் மூலம், தமது செல்வாக்கை - சிங்கள மக்கள் மத்தியில் பெருக்கிக் கொள்ளலாம் என்பதே அடிப்படை நோக்கமாகும்.

கடந்த பல வருடங்களாக உணவுக்கும், மருந்துக்கும் ஏங்கித்தவித்த வன்னி மக்களுக்காக குரல் கொடுக்காத அமைச்சர்கள் இன்று வன்னி செல்வது அவர்களின் சுயலாபம் கருதிய செயல் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மக்கள் மீது உண்மையான விசுவாசம் இருக்குமாயின், வன்னி செல்லும் அமைச்சர்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையைநீக்குவதற்காக குரல் கொடுக்க வேண்டும், அதுபோல் நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகளால் பத்துப் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டது போல் தென்னிலங்கை சிறைகளில் வருடக் கணக்கில் வாடுகின்ற அப்பாவித் தமிழ் இளைஞர்களை விடுவிக்க அமைச்சர்கள் உதவ வேண்டும்.


விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்குக் குரல் கொடுப்பதற்கும், தமிழ்க்கைதிகளை விடுதலைசெய்வதற்காக பாடுபடுவதற்கும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான வன்னிக்கு செல்ல வேண்டிய தேவை இருக்க முடியாது.

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் போர்க்கைதிகளை விடுதலை செய்விப்பதில் அரசும், காணமற்போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கமும், ஆர்வம் காட்டும் அதேவேளை சிங்கள சிறைகளில் இருக்கும் தமிழ்க்கைதிகளின் விடுதலை குறித்து எதுவுமே பேசாதிருப்பது, எல்லாம் தத்தம் நலன் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இரண்டு பொரும்பான்மைக்கட்சிகள் மாறிமாறி ஆட்சிப்பீடம் ஏறும்போதும் ஆளும்கட்சி எடுக்கும் முடிவுகளை எதிர்க்கட்சி எதிர்ப்பதும், எதிர்க்கட்சி ஆளும்கட்சியாகமாறும் போது அதன் தீர்மானங்களை ஆளுங்கட்சியாக இருந்து மாறிய எதிர்க்கட்சி எதிர்ப்பதும் இலங்கை அரசியலில் சாதாரண விடயமாகும்.

அவ்வகையில், தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணது தமக்கு புகழைத் தேடும் பயணங்காளையே ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்றனர்.

# தேசத் தலைவர்களால் மதிக்கப்பட்ட மண்டைதீவு "சேமன்" கைலாசபிள்ளை



பரந்த இவ்வுலகில் எத்தனையோ கோடி மாந்தர்கள் பிறந்து இறந்து இயற்கையின் நியதியை அனுபவிகின்றனர். அவர்களில் குறிப்பிட்ட சிலர் மட்டும் இறந்தும் புகழுடல் கொண்டு வாழுகின்றனர். அவர்களின் வரிசையில், மண்டைதீவு சேமன் கைலாசபிள்ளை அவர்களும் ஒருவர்.

### மண்டைதீவு கிராமசபைத் தலைவராக 32வருடங்கள் பணியாற்றினார்

மண்டைதீவு சேமன் என்றால் அது கைலாசபிள்ளை அவர்களையே குறிக்கும். மண்டைதீவு கிராமசபையின் தலைவராக 32வருடங்கள் இருந்தவரெனில் அவர்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், அவர் ஆற்றிய சேவையையும் விபரிக்க தேவையில்லை எனலாம்.

1907ம் ஆண்டு மேமாதம் 17ம்திகதி பிறந்த கைலாசபிள்ளை அவர்கள் ஆரம்பக் கல்வியை மண்டைதீவு மகாவித்தியாலாயத்திலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார். தமிழிலும், ஆங்கிலத்திலும் இருமொழிப் புலமை பெற்றிருந்த அவர் மண்டைதீவு உபதபாலதிபர் பதவியை வகித்தார்.

தேர்தல் மூலம் மண்டைதீவு கிராம சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சேமன் கைலாசபிள்ளை அவர்கள் தனது ஆளுமைத் திறத்தினாலும், நிர்வாகத் திறத்தினாலும் மண்டைதீவுடன் தனது சேவையை நிறுத்திக் கொள்ளாது, தீவகத்தின் ஏனைய இடங்களுக்கும் தன் பணியை ஆற்றினார்.

### பண்ணைத்தாம்போதி

பண்ணைத்தாம்போதி அமைக்கப்பட்ட வரலாற்றிலிருந்து சேமன் கைலாசபிள்ளையின் ஆற்றலை துணிச்சலை தெரிந்து கொள்ள முடியும். அல்பிரட் தம்பியையா பாரளுமன்ற உறுப்பினராக இருந்த போது பண்ணைத்தாம் போதியை அராலித்துறையூடாக அமைப்பதற்கு முயற்சி எடுக்கப் பட்டது. அதனை சேமன் கைலாசபிள்ளை அவர்கள் கடுமையாக எதிர்த்தார். யாழ்ப்பாணத்திற்கும் தீவகத்திற்குமான கிட்டிய தூரத்தையும் சிக்கலற்ற போக்குவரத்தையும் கருத்திற் கொண்டு அல்லைப்பிட்டி, மண்டைதீவு அண்மித்தாகப் பண்ணைத்தாம்போதியை அமைக்குமாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினராக அல்பிரட் தம்பியையா இருந்த போதிலும் சேமன்கைலாசபிள்ளையின் கோரிக்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தாம்போதி அமைக்கப்பட்டது.

**என்.விஜயன்**

### மருத்துவமனை திறந்து வைப்பு

மண்டைதீவு கிராம சபையின் சேமனாக கைலாசபிள்ளை அவர்கள் இருந்த போதே மண்டைதீவுக்கான மருத்துவ மனையும், மகப்பேற்று நிலையமும் அமைக்கப்பட்டது. அந்நேரத்தில் பிரதம மந்திரியாக இருந்த சேர். ஜோன் கொத்தலாவல அவர்களை அழைத்து மருத்துவமனையைத் திறந்து வைத்த பெருமை சேமன் கைலாசபிள்ளை அவர்களையே சாரும். அது மட்டுமன்றி மண்டைதீவில் சகல வசதிகளுடனும் கூடிய கிராம சபைக் கட்டிடத்தை அமைத்தார். அக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை அப்போது உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவை அழைத்து அவர் மூலம் நாட்டிவித்தார்.

### தேசத் தலைவர்களால் மதிக்கப்பட்டவர்

மண்டைதீவு என்றவுடன் சேமன் கைலாசபிள்ளை என்ற நாமம் முன்னடையாக ஒலிப்பது அனுபவத்தில் கண்ட உண்மை. காந்தியத்தில் அதீத நாட்டம் கொண்ட அவர், கதர்வேட்டி, நஷனல், உத்தரியம் ஆகிய தமிழ்ப் பண்பாட்டு உடையுடன் தனது பதவியை அலங்கரித்தார். அவரிடம் காணப்பட்ட ஆளுமையும், ஆற்றலும் அவர்பால் அரசியல் தலைவர்கள் ஈர்க்கப்பட்டதுடன், தேசத்தலைவர்களாலும் அவர் மதிக்கப்பட்டார். இதற்கு பிரதமராக இருந்த சேர். ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆகியோரின் மண்டைதீவுக்கான வருகை சான்றாகும்.

### அரசியலில் பிரபல்யம்

சமாதான நீதிவானாக, யூரி சபை அங்கத்தவராக, ஆலய அறங்காவலராக, அகில இலங்கை உப தபால் அதிபர்கள் சங்கத் தலைவராக பல பதவிகளை வகித்த சேமன் கைலாசபிள்ளை ஆரம்பத்தில் ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் இணைந்து தமிழ்க் காங்கிரஸில் தீவிரமாக ஈடுபட்டார். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொண்டார்.

தமிழ்ப் பாரம்பரியத்தை கட்டிக் காப்பதில் அதிதீவிரமாக ஈடுபட்ட சேமன் கைலாசபிள்ளை அவர்களுக்கு மூன்று ஆண் மகன்களும், மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவரது மூத்தமருமகனே திரு. கனகேந்திரன் (ஈழவேந்தன்) என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மக்கள் தெரிவின் மூலம் 32 வருடங்கள் கிராமசபைத் தலைவராக பதவி வகித்த சேமன் கைலாசபிள்ளை அவர்கள் 1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ந் திகதி இவ்வுலகை விட்டு நீத்த போதிலும், அவர் ஆற்றிய அளப்பரும் சேவையால் அவரின் நாமம் மக்கள் மனதில் குடிகொண்டுள்ளது.

# பனைவளத்தை பயன்படுத்த தவறுவது தமிழ்ச் சமுதாயத்தின் துரதிஷ்டமே

## பனை அபி.சபைத் தலைவர் சிவபாதம் உரை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் தாயகப் பூமியான வடக்குகிழக்கில் கற்பக தருவாய் திகழும் பனை வளத்தை எவரும் உரிய விதத்தில் பயன் படுத்துவதில்லை என்பது மிகுந்த வேதனைக்குரிய விடயம்.

இதன் அவசியத்தை உணர்ந்து எமது பொருளாதார வளத்தை மேம்படுத்தும் வகையில் பனையைப் பேணவேண்டிய துநம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பனைவள அபிவிருத்திக்கு தொண்டாற்றி மறைந்த பெரியார்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ் ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் பனை அவிவிருத்தி சபைத் தலைவர் பொ.சிவபாதம் தலைமையில் நடைபெற்ற போது அவர் தனதுரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

பனையின் இருந்து 801 விதமான பயன்களைப் பெறலாம் என்பது தற்போது செயல்முறையில் கண்டுணரப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள 11இலட்சம் பனைகளில் 2 சதவீதமானவை மட்டுமே மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

ஏனைய பனைகளின் பலாபலன்கள் வீணடிக்கப்படுவது எமது சமுதாயத்திற்கு ஒரு சாபக்கேடு என்றே கருத வேண்டியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)


# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட வைத்தல் தற்சமயம் எல்லா நாடுகளிலும் பெருகி வருகின்றது. எம் நாட்டைப் பொறுத்தவரையில் வறுமை, பட்டினி, குடும்ப சூழல், குடிக்கு அடிமையான தகப்பனைக் கொண்ட குடும்பம், மனமுறிவு ஏற்பட்ட குடும்பம் போன்றவை பெரும்பாலும் இதற்கு காரணமாய் உள்ளது.

இதிலிருந்து சிறுவரை,
காப்பாற்றுதல்,
பாதுகாத்தல்
துஷ்பிரயோகத்தை தடுத்தல்
சிகிச்சையளித்தல்
சட்டரீதியான நடவடிக்கை எடுக்க உதவுதல்

போன்ற செயற்திட்டங்களை யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு நடை முறைப்படுத்தி வருகின்றது.

சரவணபவான் சாந்தலிங்கம்
(புனிதபத்திரிசியார் கல்லூரி)



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
அறை எண் -30
யாழ் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

-சிறுவர்பாதுகாப்பு (ஐ.இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு- (C/3434)

# யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள் எடுத்துவர பாதுகாப்பு அனுமதி தேவை

(நமது நிருபர்)

வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டபோதும் யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்துவருவதற்கு இன்னமும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே எடுத்துவரவேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாக ஜனவரி மாதம் 15ந் திகதி அரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள் எடுத்து வருவது தொடர்பாக எந்தவிதமான விபரமும் வெளியிடப்படவில்லை.

இதனையடுத்து ஏற்கனவே அமுலில் இருந்த நடைமுறை போன்று உணவுப்பொருட்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதாக பாதுகாப்பு அமைச் சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன..

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடும் , அதிகரித்த விலையும் காணப்படுகின்றது (வ)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் மூன்று சிறைக் கைதிகளையும் யாழ் மாவட்ட எம்.பி. விநாயகமூர்த்தி நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

சிறையில் உள்ள கைதிகளை விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறிய உறுதி மொழியை அடுத்து மூன்று உண்ணாவிரதிகளும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். (வ)

# துயில் கொண்ட மனைவியை கத்தியால் வெட்டிய கணவன்

(தும்பளை)

நள்ளிரவு வேளை ஆழ்ந்த நித்திரையில் இருந்த மனைவியை மது போதையில் இருந்த கணவன் கொடூரமான முறையில் கத்தியால் வெட்டி படுகாயமடையச் செய்துள்ளார்.

இக் கொடூர சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு பருத்தித்துறை சாந்தா தோட்டம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த குடும்பப் பெண் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தினமும் மதுபோதையில் உலவும் கணவன் குடித்துவிட்டு மனைவியை துன்புறுத்துபவர் என்றும் இதனால் அடிக்கடி குடும்பத்தில் சண்டை நிகழ்வதா கவும் சம்பவதினம் இரவு நித்திரை யில் இருந்த மனைவியை கத்தி யால் வெட்டினார் என்றும் தெரிய வருகின்றது.

பலமான வெட்டுக்காயம் காரணமாக பிரஸ்தாப பெண் வாய் திறந்து கத்தமுடியாமல் மயக்கமடைந்துள்ளார். இதனால் அதிகாலையே சம்பவத்தை அறிந்து அயலவர்கள் பெண்ணை வைத்திய சாலையில் அனுமதித்தனர். (இ-245)

## 50000 பொலிஸார் தேர்தல் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சுமார் 50 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமையில் சுமார் 40 ஆயிரம் பொலிஸார் மட்டுமே கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

## கொழும்பு மாநகரசபையின் ஸ்ரீ. மு. கா. தனித்துப் போட்டி!

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட முடிவு செய்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் செயலாளார் மாநாடு ஒன்றிலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுக்கள் நடத்திய பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் கண்டி, மடவள பகுதியில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் மௌனித்து வருவதாகவும் குற்றம் சாட்டினார். (வ)

### நீர்கொழும்பு..

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தனது தேர்தல் பிரசாரத்தில் சிறைக் கைதிகள் மீது விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறியதையும் கைதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (வ)

### பனைவளத்தை..

தற்போது ஒடியல் மாவில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதாக திட்டமிட்டு வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன.

இது பொய் என்பதை சரியான வகையில் நிரூபிக்க 14 இலட்சத்தை எமது சபை ஒதுக்கியுள்ளதுடன், இந்த ஆய்வை சுவீடன் நாட்டு பல்கலைக்கழகம் நடத் தவுள்ளது.

வளர்ந்த ஏகாதிபத்திய நாடு கள் எம்மைத் திட்டமிட்டு வீழ்த் தும் நோக்கில் இவ்வாறான கட்டுக் கதைகளை உருவாக்கியுள்ளன. எமது பனம் பொருட்களுக்கு வெளிநாடுகளில் பெரும் வரவேற்பு கிடைத்து வருவது பனையின் வளத்துக்கு நல்ல தோர் சான்றாக அமைந்துள்ளது.

இடம்பெயர்ந்து போஷாக்கின்மையால் வாடும் எம் சிறார்களுக்கு பதநீரை வழங்கி அவர் களை வளம்பெற வைக்கும் முயற்சியில் பனை அபிவிருத்திச் சபை தற்போது ஈடுபட்டுள்ளது. என்று குறிப்பிட்டார். (உ-19)

# கே. வி. குணசேகரத்தின் 'கனவுகள் கற்பனைகள்' சிறுகதை வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபரும் பிரபல எழுத்தாளருமான கே.வி. குணசேகரத்தின் ''கனவுகள் கற்பனைகள்'' எனும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா, இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் நாவலர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், உரும்பிராய் றோ. க. த.பாடசாலை அதிபர் மு. விக்னேஸ்வரன் வரவேற்புரையையும், சிவஸ்ரீ ச. தானேஸ்வரக் குருக்கள், வணபிதா தோ. ஜோர்ச் அடிகள் ஆகியோர் ஆசியுரையையும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரையை உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவஞானசுந்தரம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம், முன்னாள் அதிபர் ஐ. வேலாயுதர், கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் எஸ். தயாபரன், அதிபர் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் நூல் ஆசிரியர் பற்றிய நோக்கை பேராசிரியர் சுப்பிரமணிய ஐயரும் நிகழ்த்துவர்.

வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா வெளியீட்டுரையை நிகழ்த்த வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரன் அறிமுகவுரையை நிகழ்த்த, நூல் ஆய்வுரையை ஆசிரியர் ந. விஜயசுந்தரம் நிகழ்த்துவார். (இ)


பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமம்
32 வருட ஆத்மீக சேவையை முன்னிட்டு

'வலம்புரி' வாசகர்களுக்கு ஓர் அற்புதமான அன்பளிப்பு

நாளை (04.02.2002) திங்கட்கிழமை சுவாமி விவேகானந்தர் தியானத்தில் இருந்த சமயம் இங்கிலாந்தில் எடுக்கப்பட்ட படம் வலம்புரியுடன் இணைக்கப்படும்.

சுவாமி விவேகானந்தரின் கையடக்கமான நூல்கள் தேவைப்படுவோர் 10 ரூபாவுக்குரிய தபால் முத்திரையை அனுப்பினால் நூல்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

ரூபா 30ஐ அனுப்பினால் விவேகானந்தர் விழைந்த மனித குலத் தொண்டு என்ற நூல் அனுப்பி வைக்கப்படும்.

முக்கிய குறிப்பு:
நாளை சுவாமி விவேகானந்தரின் 140வது ஜனன தினம் சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படும்.

- செயலாளர் -

[C/3435]



30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
வி. எஸ். பி. நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(C-1986)



மிகவிரைவில் எதிர்பாருங்கள்...
"வலம்புரியின் வாரமலர்"
உங்கள் எண்ணத்தில் சுரக்கும் கற்பனை ஊற்றை சுமந்து வருகிறது.
கவிதை
இலக்கிய நயம்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (C-1986)



இருபாலைக் கிழக்கு கண்ணகை அம்பாள் அறவழி மழலைகள் பூங்கச் சிறுவர்களின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் தெற்கு கிரா உத்தியோகஸ்தர் எஸ்.தயாபரன் மங்களவிளக்கேற்றுவதையும், அருகில் ஸ்ரீமுருகன் சனசமூகநிலையத் தலைவர் கே.தங்கவடிவேல், செயலாளர் ஆர்.ரகுமார் மற்றும் மாணவர்களின் ஒருபகுதியினரையும் படத்தில் காணலாம்.

- கவிதை
- சிறுகதை
- நாவல்
- கட்டுரை
- கேள்வி பதில்
- வியாதிக்கு விளக்கம் (உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்களின் பதில்)
- இலக்கிய நயம்
- மங்கையர் பகுதி
- பேனா நண்பர்கள்
- சிறுவர் சிந்தனை
- அரசியல் விளாசல்

**இன்னும் பல.. பல..**

உங்கள் ஆக்கங்களும் வலம்புரியின் வாரமலரில் இடம்பெற வேண்டுமா?
விரைந்து அனுப்புங்கள்.

ஆசிரியர்
வலம்புரி வாரமலர்
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.




அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு......

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

176\1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.